# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மே 6, 2023

Weekly E-paper ● May 06, 2023






# ஆளுநரின் புதிய கண்டுபிடிப்பு மொழித் தீண்டாமை!

சுப.வீரபாண்டியன்



## காங்கிரஸ் வசமாகட்டும் கர்நாடகம்!

இராம.வைரமுத்து

## வேண்டாம் மதவெறிப் பேச்சு!

தலையங்கம்

## காலாவதியாவது திராவிடம் அல்ல இந்துத்துவம்!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மே 6, 2023 Weekly E-paper ● May 06, 2023


# ஆளுநரின் புதிய கண்டுபிடிப்பு மொழித் தீண்டாமை!

சுப.வீரபாண்டியன்

சில மாதங்களுக்கு முன்பு, ஜி. யு.போப் அவர்களின், திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு தவறாக இருக்கிறது என்று, தமிழ் ஆங்கிலம் இரண்டையும் முற்றாகக் கற்றுணர்ந்த தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி கண்டுபிடிப்பை வெளியிட்டார். இப்போது மொழித் தீண்டாமை *(linguistic apartheid)* என்னும் புதிய கண்டுபிடிப்போடு அரங்கிற்கு வந்திருக்கிறார்!

இதனைத் தாண்டி திராவிடக் கருத்தியல் காலாவதியாகிவிட்டது என்னும் தன் பழைய பல்லவியை பாடவும் அவர் மறக்கவில்லை. தமிழ்நாட்டில், தொடர்ந்து மதவாத - வர்ணாசிரம சக்திகளும், அவர்களின் கைக்கூலிகளாக விளங்கும் சிலரும், திராவிடத்தை எதிர்த்துக் கூக்குரலிட்டுக் கொண்டே இருப்பது வழக்கமானதுதான். அந்த இரைச்சல் கடந்த 80 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. ஆனால் அதனால் திராவிடக் கருத்தியலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. மாறாக, அது மென்மேலும் வலிமை அடைந்திருக்கிறதே அல்லாமல் மெலியவோ, தேயவோ இல்லை!

இப்போது ஓரிரு நாள்களுக்கு முன்பு, ஓர் ஆங்கில நாளேட்டிற்கு அளித்த நேர்காணலில், ஆளுநர் ரவி புதிய கண்டுபிடிப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். *it is an ideology that rapidly enforces linguistic apartheid on the whole of the nation* என்பது அவர் கூற்று அதாவது நாடு முழுவதும் மொழித் தீண்டாமையை இந்தக் (திராவிட) கருத்தியல் விரைந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்!

மேலை நாடுகளில் நிறத்தின் அடிப்படையிலும், இந்தியாவில் சாதியின் அடிப்படையிலும் தீண்டாமை உண்டு என்பதை நாம் அறிவோம். இந்தியாவின் சாதியத் தீண்டாமைக்கு யார் காரணம், எது மூல ஊற்று என்பதையும் உலகம் அறியும். இப்போது இவர் புதிதாக மொழித் தீண்டாமை என்று குறிப்பிடுகிறார்!


'THERE IS NO SUCH THING AS DRAVIDIAN MODEL... IT'S AN EXPIRED IDEOLOGY'

Tamil Nadu governor R N Ravi pulls no punches when he talks about the role of the governor and his own experience in the state in dealing with the DMK government. Excerpts from an interview to Jaya Menon

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பேசும் தமிழ் மரபும், உலகெங்கும் சமத்துவம் சகோதரத்துவம் வேண்டும் என்று வற்புறுத்தும் திராவிடக் கருத்தியலும், என்றென்றும் தீண்டாமைக்கு எதிரானவை! உண்மை இவ்வாறு இருக்க, எந்த அடிப்படையில் நம் மீது இப்படி ஓர் இழிவான குற்றச்சாட்டை ஆளுநர் சுமத்துகிறார்?

விரைவில் அமையவருக்கும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில், தமிழ், ஆங்கிலம் தவிர பிற மொழி நூல்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கவில்லையாம். எப்போதும் இரு மொழிக் கொள்கையை ஏற்றிருக்கும் தமிழ்நாடு, இரண்டு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள நூல்களை நூலகங்களுக்கு வாங்குவது என்பதுதானே இயல்பு! இது எப்படித் தீண்டாமை ஆகும்?

ஆளுநர் பிறந்த பீகார் மாநிலத்தில், ஆயிரக் கணக்கில் தமிழ், தெலுங்கு, மலையாள நூல்கள் நூலகத்தை நிரப்பி உள்ளனவா? தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் எல்லாம் எல்லா மொழி நூல்களும் போதுமான அளவிற்கு நூலகங்களில் உள்ளனவா?

சமஸ்கிருதத்திற்கும், இந்திக்கும் கோடி கோடியாய் பணத்தை கொட்டிக் கொடுக்கிற ஒன்றிய அரசு, தமிழ் உள்ளிட்ட ஐந்து செம்மொழிகளுக்கு வழங்கப்படும் பணத்தைப் போல 29 மடங்கு சமஸ்கிருதத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதை ஓர் அமைச்சரே நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார். இது மொழித் தீண்டாமை இல்லையா! இந்தியாவில் சமஸ்கிருதத்திற்கு எத்தனை

தொடர்ச்சி அடுத்தப்பக்கம்

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## வேண்டாம் மதவெறிப் பேச்சு!

அமைதியாகச் சொல்வது வேறு. ஏற்றுக் கொள்வதும், கொள்ளாததும் அவரவர் விருப்பம்.

அடக்கு முறையால் திணிப்பது என்பது வேறு, அது வன்முறை.

மதத்தைக் கவனமாகக் கையாளா விட்டால் அது ஆபத்தை விளைவித்து விடும். ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க உள்ளிட்ட சங்பரிவாரங்களின் கைகளில் மதம் ஆடிக்கொண்டு இருக்கிறது. குறிப்பாகத் தேர்தல் வரும்போதெல்லாம் அது தலை விரித்து ஆடும்.

அண்மையில் கர்நாடகத்தில் பா.ஜ.க தேர்தல் பிரச்சாரத்தின் போது இது தெளிவாக வெளிப்பட்டது. பிரதமர் மோடி தன் ஆட்சியில் என்ன செய்தார் என்பதைச் சொல்லி வாக்கு கேட்க வேண்டும். அதை விட்டுவிட்டு காங்கிரஸ் கட்சி அனுமனுக்கு எதிராக இருக்கிறது என்று சொல்லி "பஜ்ரங்பாலி " என்று பஜ்ரங்தளத்தை, அனுமனைக் காட்டி முழக்கமிட்டு இருக்கிறார்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் ஒரு படி மேலே சென்று முஸ்லிம்களின் வாக்கு பா.ஜ.கவுக்குத் தேவையில்லை என்று பேசியிருப்பது கவனிக்கத்தக்கது.

பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்க வேண்டும், அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்றால் ஏதோ ஒரு வகையில் கலவரத்தை உருவாக்கி விடும். சிறு பொறி பெரும் விளைவை ஏற்படுத்தி விடும்.

அயோத்திக்குக் 'கரசேவை' என்று செங்கல் அனுப்பி, ரதயாத்திரை நடத்தியதன் விளைவு பாபர் மசூதி இடிக்கப்பட்டது. கோத்ரா கலவரத்தின் பின்னணியில் மதம் இருந்தது.

அனைத்து மதங்களைத் தழுவிய மக்கள் தமிழ் நாட்டிலும் வாழ்கிறார்கள். இங்கு மத வேறுபாடோ, மதக் கலவரமோ நிகழ்ந்தது இல்லை. காரணம் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க சங்கிக் கூட்டத்தைத் தமிழர்கள் ஏற்காதது தான்.

காவடி எடுத்தார்கள், அரைக்கால் சட்டைப் பேரணி போனார்கள், 'போனி' ஆகவில்லை.

ஒன்றியத்தின் தென் மாநிலங்களில் கர்நாடகத்தில் மட்டுமே ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க இப்பொழுது அதை இழக்கப் போவதாக தேர்தல் முன்கணிப்புகள் சொல்கின்றன.

அந்த பயத்தில், கர்நாடக தேர்தல் பிரச்சாரத்தில், ஒரு மலையாளப் படத்தைச் சொல்லி, வன்முறை எந்தவடிவில் வருகிறது என்பதை மதத்தின் பார்வையில் பேசியிருக்கிறார் மோடி.

மதத்தை "அபின் " என்ற ஒரு சொல்லால் விளக்கி விட்டார் காரல் மார்க்ஸ்.

மதத்தை ஏற்பதும் மறுப்பதும் அவரவர் விருப்பம். ஆனால் மதவெறியை உருவாக்குவதும், உருவாக்குபவர்களையும் மக்கள் அடையாளம் காண வேண்டும்.

அமைதி நிலவும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள். காரணம் திராவிடச் சித்தாந்தம். மதவெறி அல்ல.

கடவுள் இல்லை என்று சொன்ன பெரியார் தான் கோயிலுக்குள் செல்லவும், வைக்கத்திலும் போராடியிருக்கிறார்.

மதவெறியை எதிர்ப்போம்!

மனித நேயத்தை வளர்ப்போம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்க தொடர்ச்சி...

*பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன! பிற மொழிகளுக்கு ஒன்றிய அரசு நிறுவியுள்ள பல்கலைக்கழகங்களில் எண்ணிக்கை என்ன? இது மொழித் தீண்டாமை இல்லையா?*

*மொழித் தீண்டாமை பற்றிப் பேசும் ஆளுநர், ஏன் இங்கு அவர் கூட்டும் கூட்டங்களில், இந்தியிலோ, சமஸ்கிருதத்திலோ, அவருடைய தாய் மொழியான பீகாரியிலோ பேசாமல், ஆங்கிலத்தில் பேசுகிறார்? ஏன் பீகாரியை போலவோ, வடநாட்டுக்காரரைப் போலவோ அல்லாமல், ஆங்கிலேயரைப் போல உடை உடுத்துகிறார்? இவையெல்லாம் மொழித் தீண்ண்டாமை ஆகாதா?*

*உண்மையாக எண்ணிப் பார்த்தால், தமிழ்நாடுதான் எல்லோரோடும் நேசம் காட்டுகிற, எல்லோருடைய மொழிகளையும் நேசிக்கிற நாடாகவே இருந்து வருகிறது! நாம் எல்லாவிதமான ஆதிக்கத்தையும் எதிர்க்கிறோம் என்பதுதான் உண்மையே தவிர, யார் ஒருவரையும், எந்த மொழியையும் எதிர்க்கவே இல்லை. அப்படித் தீண்டாமை உணர்வு கொண்டவர்களாக இருக்கிறோம் என்றால், தமிழ்நாட்டின் தலைநகரில் இந்தி பிரச்சார சபா இத்தனை ஆண்டுகள் இவ்வளவு பாதுகாப்பாய் இங்கே இருக்க முடியுமா?*

*இன்னொரு உண்மையையும் ஆளுநர் திட்டமிட்டு மறைக்கிறார். தமிழ்நாட்டு நூலகங்களில். தமிழ் ஆங்கிலம் தவிர வேறு நூல்களே இல்லை என்கிறார். எல்லா நூலகங்களையும் ஆளுநர் சுற்றிப் பார்த்து விட்டாரா? எடுத்துக்காட்டாக, அவருடைய ராஜ்பவனுக்கு மிக அருகில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திலேயே இந்தி, தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட பிற மொழி நூல்கள் ஏறத்தாழ 10 ஆயிரம் உள்ளன. அண்ணா சாலையில் அமைந்திருக்கும் தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் 2000 ஹிந்தி நூல்கள் இடம் பெற்றுள்ளன.*

*தீண்டாமை எதிர்ப்பு வீரர் ஆளுநர் ரவி அவர்கள், பீகார் நூலகங்களில் உள்ள பிற மொழி நூல்களின் எண்ணிக்கையை விரைவில் தருவார் என்று நம்புகிறோம்!*

*திராவிடப் பெருஞ்சுவரில் மோதி மோதி அழிந்தவர்கள் பலர். இப்போது கடைசியாக வந்திருப்பவர் பெயர்தான் ஆர் என் ரவி!*

# காங்கிரஸ் வசமாகட்டும் கர்நாடகம்!


வழக்கறிஞர் இராம.வைரமுத்து

224 தொகுதிகள் கொண்ட கர்நாடகா சட்டப்பேரவைக்கு 10.05.2023 அன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தற்போது, பா.ஜ.க-வுக்கு 119, காங்கிரஸுக்கு 75, மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு 28 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆட்சியை தக்க வைக்க பா.ஜ.கவும், ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் மற்றும் மதச்சார்பற்ற ஜனதாதளம் ஆகிய கட்சிகளும் தீவிரமாகத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருவதால் மும்முனைப் போட்டி நிலவுகிறது.

கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம், அனைத்து வீடுகளுக்கும் 200 யூனிட் இலவச மின்சாரம், குடும்பத் தலைவிகளுக்கு ரூ.2,000 மாதாந்திர உதவித்தொகை, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 கிலோ அரிசி, வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் தோறும் ரூ. 3000 உதவித்தொகை உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுப் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி ஏற்கும் முதல் நாளே இந்த ஐந்து முக்கிய திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்று அறிவித்துள்ளார்.

பட்டியலிடப்பட்டோர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு உச்சவரம்பை 50 விழுக்காடிலிருந்து 75 விழுக்காடாக உயர்த்துவதாகவும், பட்டியலிடப்பட்டோர் இடஒதுக்கீட்டை 15 விழுக்காடிலிருந்து 17 விழுக்காடாகவும் பழங்குடியினர் இடஒதுக்கீட்டை 3 விழுக்காடிலிருந்து 7 விழுக்காடாகவும் உயர்த்துவதாக அறிவித்துள்ள காங்கிரஸ், பசவராஜ் பொம்மை அரசால் ரத்து செய்யப்பட்ட இசுலாமியர் இட ஒதுக்கீட்டை மீண்டும் அமல்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகள் மக்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆபரேஷன் லோட்டஸ் மூலம் மாற்றுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி மக்கள் தீர்ப்புக்கு மாறாக அமைந்த பசவராஜ் பொம்மை அரசு மீது ஊழல் குற்றச்சாட்டுகள், விலைவாசி உயர்வு, விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு, அரசின் நிர்வாகக் குளறுபடிகளால் கர்நாடகாவை விட்டு வெளியேறும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், இசுலாமியருக்கான இடஒதுக்கீடு ரத்து, ஹிஜாப் விவகாரம், சிறும்பான்மையினர் மீதான வெறுப்பு அரசியல், 'ஜாதிக் கணக்கு' அடிப்படையில் இந்து மக்களிடையே பிரிவினை ஏற்படுத்துவது போன்ற





பல்வேறு காரணங்களால் மக்களிடம் கடும் அதிருப்தி நிலவுகிறது. அத்துடன் காங்கிரஸ் முன்னணி தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்திக்கு அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றம் அளித்த தண்டனையை முன்வைத்து அவரது பதவியைப் பறித்து அரசு பங்களாவைக் காலி செய்ய வைத்த செயல் அந்த அவதூறு வழக்குக்கு காரணமாக அமைந்த ராகுல் உரை நிகழ்த்தப்பட்ட அதே கர்நாடகா மண்ணில் காங்கிரஸிற்கு மக்களிடம் பலத்த வரவேற்பை பெற்றுத் தந்திருக்கிறது. இதை அறிந்த பா.ஜ.கவைச் சேர்ந்த முன்னாள் முதல்வர் ஜெகதீஷ் ஷட்டர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருப்பது காங்கிரஸின் வெற்றிவாய்ப்பை அதிகரித்திருக்கிறது.

அதனால் இது வரை இலவச திட்டங்கள் அவசியமற்றவை என்று கூறி வந்த பா.ஜ.க, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 5 கிலோ இலவச அரிசி, நாள்தோறும் 1/2 லிட்டர் நந்தினி பால் இலவசம், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு உகாதி, விநாயகர் சதுர்த்தி மற்றும் தீபாவளி பண்டிகைகளை முன்னிட்டு 3 இலவச சிலிண்டர்கள் என தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்துள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் இசுலாமியருக்கு வழங்கப்பட்டிருந்த நான்கு சதவிகித இட ஒதுக்கீட்டை ரத்துசெய்துவிட்டு, கர்நாடகாவில் பெரும்பான்மை சமுதாயங்களாக இருக்கும் லிங்காயத், ஒக்காலிகர் ஆகியவற்றுக்கான இட ஒதுக்கீடு சதவிகிதத்தை பா.ஜ.க அரசு அதிகரித்திருக்கிறது. மேலும் பிரதமர் மோடி தனது பரப்புரையில் "காங்கிரஸ் தலைவர்கள் இதுவரை 91 முறை என்னைக் கடுமையான வார்த்தைகளால் திட்டி இருக்கிறார்கள். என்னை திருடன் என்றார்கள், நான் சார்ந்த ஓபிசி சமூகத்தையே திருடன் என்றார்கள். அதுமட்டுமல்ல, கர்நாடகாவின் லிங்காயத் சமூகத்தையும் திருடர்கள் என விமர்சித்தார்கள்" என்று நீலிக்கண்ணீர் வடித்திருப்பது அவர்களின் தோல்வி பயத்தை படம் பிடித்துக் காட்டுகிறது.

தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் தேர்தல் அறிக்கை அதன் வெற்றியை உறுதி செய்வதாக அமைந்துள்ளது. நேற்று வரை தமிழ்நாட்டைத் தாண்டி திராவிடம் எங்கே இருக்கிறது என்று கேட்ட பத்ரி சேஷாத்ரி "கர்நாடகாவைக் காங்கிரஸ் திராவிடமயமாக்கி இருக்கிறது" என்று டிவிட்டரில் பதிவு செய்துள்ளதன் மூலம் அவர்களின் பதட்டத்தை பார்க்க முடிகிறது.

"நல்லதன் நலனுந்தீய தன் தீமையும் இல்லை யென்போர்க்கு இன்னா கிலியர்" என்ற புறநானூற்றுப் பாடலுக்கேற்ப தீமைகளையே மக்களுக்கு செய்து கொண்டிருக்கும் பா.ஜ.க ஆட்சி வீழ்வது நிச்சயம். தென்னிந்தியாவில் பா.ஜ.க ஆட்சி அமைந்த முதல் மாநிலமான கர்நாடகம், தற்போது அக்கட்சியின் தோல்விக்கான தொடக்கமாக அமையப் போகிறது. இந்தத் தேர்தலின் முடிவுகள் அடுத்து நடைபெறவிருக்கும் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநில சட்டமன்றத் தேர்தல்களில் மட்டுமின்றி அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும்.


கர்நாடகம் காங்கிரஸ் வசமாகட்டும் !

இந்திய ஒன்றியம் திராவிடமயமாகட்டும் !!

# காலாவதியாவது திராவிடம் அல்ல இந்துத்துவம்!

எழில்.இளங்கோவன்

திராவிட மாடல் என்று ஒன்றும் இல்லை.





திராவிட மாடல் கொள்கை காலாவதியானது. திராவிட மாடல் என்பது அரசியல் வாசகம், காலாவதியான சித்தாந்தத்தைப் புதுப்பிக்க வைக்கும் முழக்கமே திராவிட மாடல் என்று ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார்.

இப்படிச் சொன்னவர் தனியொரு மனிதராகவோ, அரசியல்வாதியாகவோ இருந்திருந்தால் இது அவரின் கருத்துரிமை என்று எளிதில் தள்ளி விடலாம்.

ஆனால் இத்தகைய அரசியல் அடிப்படையான கருத்துகளைச் சொல்பவர் தமிழ்நாட்டின் ஆளுநர் என்பது கவனிக்கத்தக்கது.

ஒன்றிய அரசால் அனுப்பப்படும் ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு, மாநிலத் தலைமை நீதிபதியால் பதவிப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்.

எனவே ஆளுநரின் பேச்சு அளவறிந்து, ஒரு பக்கச்சார்பு இன்றி நடுநிலையாக இருக்க வேண்டும். இதற்கு நேர் முரணாகச் செயல்பட்டுக் கொண்டு இருப்பவர் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சித்தாந்தங்களான ஒரே நாடு - ஒரே பாரதம், சனாதன தர்மம், பகவத் கீதை போன்ற இந்துத்துவக் கருத்துக்களைப் பேசுவதும், குறிப்பாக மாணவர்களிடையே பேசுவதுமாக, ஒரு ஆர்.ஆர்.எஸ் காரரின் வேலையை அவர் செய்து கொண்டு இருக்கிறார்.

அதனால் அதன் நேர் எதிர் சித்தாந்தமான திராவிடச் சித்தாந்தத்தைக் கொச்சைப்படுத்திக் கொண்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிக நல்லவர். அவரை மதிப்பதாகச் சொல்லும் ஆர்.என்.ரவி, அவரின் திராவிட மாடல், திராவிடச் சித்தாந்தம் காலாவதியாகிவிட்டது என்றும், அது வெறும் அரசியல் பெயர்தான் என்றும் தன் அறியாமையைக் காட்டியிருக்கிறார் அவர்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தொடங்கி, இன்றைய தி.மு. கழக ஆட்சி வரை திராவிட இயக்கம் செய்துள்ள அளப்பரிய சாதனைகள் சொல்லி மாளா.

குறிப்பாகத் திராவிடத்தின் மாபெரும் ஆளுமையான ஐயா தந்தை பெரியாரின் கைத்தடியின் பின்னால் தமிழ்நாடு நிற்கிறது என்பதே திராவிடச் சித்தாந்தத்தின், திராவிட மாடலின் வெற்றி.

இந்துத்துவத்தில் மயங்கி சாதி வேர்களில் இடுங்கிப் போயிருக்கும் ஒன்றிய மாநிலங்களில், அந்த சாதியத்தை, அந்த சனாதனத்தை, அந்தத் தீண்டாமையின் வேரைத் தமிழ் நாட்டில் தோண்டியெடுத்து உலுக்கியது திராவிட இயக்கம், உலுக்கியவர் தந்தை பெரியார்.

- மூட நம்பிக்கையைத் தகர்த்தவர் பெரியார்.
- பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தவர் பெரியார்.
- வகுப்புவாரி உரிமைக்காகப் போராடியவர் பெரியார்.
- இந்துமத ஆதிக்கத்தை எதிர்த்துக் களம் கண்டவர் பெரியார்.
- ஆதிக்க இந்தியை இங்கு நுழைய விடாமல் தடுப்பவர் பெரியார்.
- சமூகநீதியை இறுதி மூச்சுவரைப் பேசியவர் தந்தை பெரியார் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்துத்துவத்தைத் தமிழ் நாட்டில் நுழைய விடாமல் தடுத்துக் கொண்டு இருப்பதற்கு, பெரியாரின் திராவிடச் சித்தாந்தம் உயிர்ப்போடு இருக்கிறது என்பதே வெளிப்படை.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தான், திராவிடத்தைக் கொச்சைப்படுத்திக் கொண்டு இருக்கிறார் ஆளுநர்.

பல்கலைக் கழகங்களின் வேந்தர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசிடம்தான் இருக்க வேண்டும்.

ஆனால் ஆளுநர்தான் நியமிக்க வேண்டும் என்றும், அதனால் கோப்பை நிறுத்தி வைத்துள்ளேன் என்றும் ஆங்கில நாளிதழ் ஒன்றின் நேர்காணலில் ஆளுநர் கூறுவது தமிழ்நாட்டின் மக்களை இழிவுபடுத்துவது போல இருக்கிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஆர்.எஸ்.எஸ், அதன் பரிவாரங்களுக்கு இங்கு வேலையே இல்லை.

ஆளுநர் ஆர்.என்.ரவி விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி தமிழ்நாட்டில் திராவிட சித்தாந்தம் உயிர்ப்போடு இருக்கிறது. திராவிட மாடல் அரசு சிறப்போடு செயல்படுகிறது.

ஆளுநர் தன் வேலையைச் செய்வதை விட்டுவிட்டு, ஆர்.எஸ்.எஸ். அரசியல் பேசுவதைத் தொடர்வது ஆளுநர் பொறுப்புக்கு அழகில்லை. அவரின் பொறுப்பற்றப் பேச்சு கண்டனத்திற்கு உரியது.

Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian